**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 93/2021**

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகசுந்தரி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால், பாதி தெரியும், பாதி தெரியாது. தாவா சொத்துக்கள் 1 முதல்5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால், எங்களுக்கும் உரிமை உள்ளது. எனது உரிமை மூலத்தை நிரூபிக்க ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவரின் சொத்துக்களில் எனக்கு உரிமை இருந்தால், பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமல் இவ்வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து 6 முதல் 8 பிரதிவாதிகள் எந்த பத்திரமும் பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனை மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) உண்மையில் நான் ஆட்சேபனை மனு தாக்கல் செய்திருந்தால் அதற்கான நகலை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். உண்மையான உரிமையாளர்களின் ஆவணங்களை பரிசீலனை செய்து பத்திரம் பதிவு செய்ய 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகும். உரிய ஆவணங்களை தாக்கல் செய்யும் போது சட்டப்படி பத்திர பதிவு செய்யக்கூடாது என தடை செய்ய தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது கணவர் என்ற நிலையில் அவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரியோ,

குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழோ அல்லது பாகப்பிரிவினை கோரியோ வேறு ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

3) உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யும் போது 6 முதல் 8 பிரதிவாதிகள் சட்டப்படி பதிவு செய்ய கடமைப்பட்டவர்கள் என்றும், அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உரிய அறிவிப்பு கொடுக்காமல் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**